<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

OS.NO.38/2021

P.W.2-INDIARA GANDHI, W/O.BASKARAN

DATE:20.10.2022

<u>வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

பிரதிவாதி என்னுடைய மைத்துனர் என்றால் சரிதான். பிரதிவாதி பாலாஜிக்கும் சாந்தினி என்கிற சாருலதா ஆகியோருக்கு கோர்ட் மூலமாக விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரிதான். அதன்பிறகு என்னுடைய மைத்துனர் கோமதி என்ற வேறு ஜாதி பெண்ணை திருமணம் செய்துக்கொண்டார் என்றால் திருமணம் செய்துக்கொண்டதாக நான் கேள்விப்பட்டேன். என் மைத்துனர் பாலாஜிக்கும் கோமதிக்கும் திருமணமாகி 2 ஆண் பிள்ளைகள் உள்ளனர் என்றால் அவ்வாறு 2 ஆண் பிள்ளைகள் உள்ள விவரம் எனக்கு கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு தான் தெரியும். நானும் என் கணவரும் என்னுடைய மைத்துனர் வேறு ஜாதி பெண்ணை திருமணம் செய்துக்கொண்டதால் நாங்கள் என் மைத்துனர் மீது மனக்கசப்புடன் இருந்து அவரை எங்கள் வீட்டில் சேர்க்காமல் இருந்தோம் என்றால் அப்படியெல்லாம் இல்லை. எங்களுக்கும் என் மைத்துனருக்கும் இடையே அவரின் 2வது திருமணத்திற்கு பிறகு பேச்சு வார்த்தை இல்லை என்றால் அதற்கு முன்பிருந்தே பேச்சு வார்த்தை இல்லை. எவ்வளவு வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் 2011லிருந்து பேச்சு வார்த்தை இல்லை. 2021 என்னுடைய கணவருக்கும் பிரதிவாதி பாலாஜிக்கும் பேச்சு வார்த்தை ஏற்பட்டது என்றால் ஜனவரி 2021ல் பேச்சு வார்த்தை ஏற்பட்டது. சொத்து பிரிப்பதற்காக பேச்சு வார்த்தை ஏற்பட்டது. நானும் என் கணவர் பாஸ்கரும் வெவ்வேறு குடும்பத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். திருமணம் மூலமாகத்தான் என் கணவரின் குடும்பம் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனக்கும் பாஸ்கருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 06.02.1997ல் திருமணம் நடந்தது. அதற்கு முன்னர் என் கணவர் குடும்பத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். 1996ல் என் கணவர், அவரின் சகோதரர்கள் பாலாஜி மற்றும் பிரபாகரன் ஆகியோர்களுக்கு இடையே தாவா சொத்துக்கள் குறித்து வாய்மொழியாக பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்றாலும் அதை பற்றி தெரிய எனக்கு வாய்ப்பில்லை என்றாலும் 1996ல் வாய்மொழி பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை என்று என் கணவர் என்னிடம் சொல்லியுள்ளார். அவ்வாறு எப்போது சொன்னார் என்றால் 2010ல் சொல்லியுள்ளார். 2010ல் என் கணவர் கூறியுள்ளார் என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் என் மைத்துனர் பாலாஜிக்கும் சரியான உறவுமுறை இல்லை என்பதால் எப்போதும் அவர் மீது காழ்ப்புணர்ச்சியுடன் உள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் பாஸ்கரன், அவரின் தம்பி பிரபாகர் மற்றும் பாலாஜி ஆகியோருக்கும் ஒரே தந்தை தான்

என்றால் சரிதான். அவர்களின் அப்பா பெயர் என்னவென்றால் நடராஜன். பிரதிவாதி பாலாஜிக்கு தாயார் வேறு என்றால் சரிதான். பிரதிவாதி பாலாஜியின் தாயார் பெயர் என்னவென்றால் வசந்தியம்மாள். பிரதிவாதி பாலாஜியின் அம்மாவிற்கு வசந்தியம்மாள் என்ற ஒரு பெயர் தான் என்றால் சரிதான். என் கணவர் பாஸ்கரன் மற்றும் பிரபாகரன் ஆகியோர்களின் தாயார் பெயர் என்னவென்றால் யசோதாபாய். பிரதிவாதி பாலாஜி வேறு தாயாருக்கு பிறந்தவர் என்பதால் ஆரம்பத்திலிருந்தே அவரை நான் ஒதுக்கி வைத்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை யார் யாருக்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் பாலாஜியின் முதல் மனைவி சாருலதா என்கிற சாந்தினி அவரின் குழந்தையின் உரிமைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் விவரங்களை என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். அதிலுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்திலும் சொத்து விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி பாலாஜி அவரின் முதல் மனைவி சாந்தினி என்கிற சாருலதாவை எனக்கு எப்போதிலிருந்து தெரியும் என்றால் அவர்கள் திருமணம் ஆனதிலிருந்து தெரியும். சாந்தினி என்கிற சாருலதா குடும்பமும் என்னுடைய குடும்பத்திற்கும் நெருக்கமா என்றால் ஆமாம். எவ்வளவு நாட்களாக நெருக்கம் என்றால் 3, 4 வருடங்களாக நெருக்கமாக உள்ளோம். என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் மூதாதையர் சொத்துக்களை எல்லாம் என் கணவர், பாலாஜி மற்றும் பிரபாகர் ஆகியோர்கள் 2010ல் விற்றுவிட்டதாகவும் அதில் ரூ.50 லட்சத்திற்கும் மேலாக வருமானம் வந்ததாக கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் கூறவில்லை. 1996லேயே என் கணவருக்கும் அவரின் தம்பிகளுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டதால் தான் 2010ல் அந்த சொத்துக்களை விற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா 3 அயிட்ட சொத்தை மூதாதையர் சொத்தை விற்ற பணத்திலிருந்து வாங்கினார்கள் என்று என்னுடைய முதல் விசாரணைக்கான வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா 3 அயிட்ட சொத்து பாலாஜியின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. 2010ல் எந்தெந்த சொத்துக்களை விற்றார்கள், அதன் மூலம் எவ்வளவு பணம் வந்தது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 2010ல் தான் லத்தேரியில் உள்ள இடத்தை விற்றார்கள். லத்தேரியில் எந்த சர்வே நம்பரில், எவ்வளவு விஸ்தீரணம் விற்றார்கள் என்பது குறித்து எனக்கு தெரியாது என்றாலும் சொத்து விவரம் தெரியாது என்றாலும் சரியல்ல. சர்வே நம்பர் தெரியாது, சொத்து விற்ற விவரம் எனக்கு தெரியும். பிரதிவாதி பாலாஜியின் தகப்பனாரின் கடன் விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி பாலாஜி என் கணவரை வற்புறுத்தி சொத்துக்களை அனைத்தையும் விற்றார் என்று கூறுவது பொய் என்றால் யாரும் யாரையும் வற்புறுத்தி எந்த சொத்தையும் விற்கவில்லை. எனக்கு திருமணம் ஆனது 1997ல் தான் என்றாலும் அதற்கு முன்னர் குடும்பத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றாலும் என் கணவர் பாஸ்கரன் சொன்னதின் பேரில் தான் நான் நடந்து வந்தேன் என்றாலும் பிரதிவாதிக்கும் சாந்தினி என்கிற சாருலதாவிற்கும் குடும்ப பிரச்சனை ஏற்பட்டத்திலிருந்து நான் ஒருதலைபட்சமாக

பிரதிவாதிக்கு எதிராக செயல்படுகிறேன் என்றாலும் சரியல்ல. சாந்தினி என்கிற சாருலதா கேட்டுக்கொண்டதின் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1996ல் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினைப்படி 2021ல் பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. 1996ல் எந்த வாய்மொழி பாகமும் ஏற்படவில்லை. என்னுடைய திருமணத்திற்கு முன்பு நடந்த சம்பவம் என்பதால் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டி சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

P REVATHY
Digitally signed by P REVATHY
Date: 2022.10.20 16:18:11 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
வேலூர்.